DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 10 நடராஜன்** |
| Father's Name | ராமு |
| Village | கோலியனூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 21.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது மரக்காணம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2022ம் தேதி செஞ்சி காவல்நிலையத்தில் பணிபுரியும் போது செஞ்சி மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலின்பேரில் இங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிகிச்சையிலிருந்த மேல்களவாய் கிராமத்தை சேர்ந்த ஷெரிப் மகன் அக்பர் என்பவரிடம் 13.30 மணிக்கு வாக்குமூலம் பெற்று 15.00 மணிக்கு காவல்நிலையம் வந்து செஞ்சி காவல்நிலைய குற்ற எண் 45/2022 U/s 341, 294(b), 323, 324, 307 IPC r/w 3 of TN PPDL Act படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சுமார் 7 மணிநேரம் காலதாமதமாகத்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செயயப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கும் புகார்தாரருக்கும் முகநூல் பக்கத்தில் அமீர்பாஷா என்பவர் படம் போட்டதால் பிரச்சனை என்றால் சரிதான். இருவரும் 2 மணிநேர காலதாமதமாகத்தான் மருத்துவமனைக்கு காலை 10 மணியில் சேர்ந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு 10.30 மணிக்கு தகவல்கிடைத்ததின் பேரில்

வாக்குமூலம் வாங்க சென்றேன் என்றால் சரிதான். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அக்பர் என்பவரை மருத்துவரின் முன்பாக நீங்கள் வாக்குமூலம் வாங்கினீர்களா என்றால் மருத்துவர் முன்பாக வாங்கவில்லை. இந்த பிரச்சனை தொடர்பாக அக்பர் மனைவி முசரத்பேகம் என்பவர் உங்களுக்கு போன் செய்து நீங்கள் அதன்பிறகு சம்பவ இடம் சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார் அவ்வாறு கூறியிருந்தால் தவறு என்றால் சரிதான். காயம் பட்ட 2 நபர்களையும் நீங்கள் தான் 108 ஆம்புலன்சில் நான் தான் மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பிவைத்ததாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக புகாா வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் 7.45 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனம் TN 16 Y 8736 Honda Deo மற்றும் TN 16 W 6330 Pulsar வாகனம் இந்த 2 வாகனத்தையும் அக்பருக்கு போன்செய்து எடுத்துசெல்லுங்கள் என கூறியதாக குறிப்பிட்டுள்ளது உண்மையா, பொய் என்றால் பொய். 9 மாதங்கள் கழித்து வாகனத்தை வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் தவறு. காவல் ஆய்வாளர் தங்கம் என்னை அழைத்து இந்த வழக்கு சம்மந்தமாக வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல வாக்குமூலம் பெற்றார். என்னிடம் பெறப்பட்டதாக கூறப்படும் வாக்குமூலம் வழக்கு கோப்பில் இல்லை. உண்மையில் வாக்குமூலம் வாங்கியிருந்தால் வழக்கு கோப்பில் இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை அ.சா.1 அ.சா.2 இருவரும் முன்விரோதம் காரணாக தாக்கிவிட்டு இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றபோது தவறிவிழுந்ததில் எற்பட்ட காயத்தை மறைத்து எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உங்களிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் நீங்கள் சரிவர விசாரணை செய்யாமல் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள குற்றசாட்டுகளுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.